பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 27 சனிக்கிழமை (13-10-2001) தொலைபேசி 3378 ஒலி 306

## தேர்தல் காலத்தில் பாரிய தாக்குதலை நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருகின்றனர்

### புலனாய்வுப் பிரிவு படைத்தரப்புக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் விடுதலைப் புலிகள் இராணுவ சமநிலையை மேலும் தங்களுக்கு சாதகமாக்க, பாரிய தாக்குதல்களை தொடுக்கலாமென இராணுவ புலனாய்வுத் துறையினர் படைத்தரப்பை எச்சரித்துள்ளனர். இதனையடுத்து முப்படையினரும் முழு உசார் நிலையில்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலமாக விடுதலைப்புலிகள் தமது படைபலத்தை கட்டியெழுப்பி வருகின்றனர். வன்னியில் புலிகள் புதிய ஆயுதங்கள் மற்றும் போர்த் தளபாடங்களை களஞ்சியப்படுத்தும் நடவடிக்கையில் தீவிரமாய் ஈடுபட்டுள்ளனர். பல ஆயுதக் கப்பல்கள் புலிகளின் பகுதிகளுக்கு வந்துள்ளன. இதனை படையினர் அவதானித்துள்ளனரென்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் வடக்கு கிழக்குப் போர் முனைகளில் புலிகள் முக்கிய ஆயுத தளபாடங்களைநகர்த்தி போருக்கு தயாரான நிலையில் ( 8ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு - அம்பாறை மாவட்டங்களில்
# அமெரிக்காவுக்கு எதிராக
# முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்!

### 50 ஆயிரம் பேர் பங்குபற்றினர்
### ஜனாதிபதி புஷ்ஷின் கொடும்பாவி எரிப்பு

(நமது நிருபர்)

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா மேற்கொண்டுள்ள தாக்குதல்களைக் கண்டித்து தலைநகர் கொழும்பிலும், மருதானையிலும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் கிராமங்களிலும் நேற்று ஜும்மா தொழுகையின் பின் மாபெரும் ஆர்ப்பாட்டங்களை முஸ்லிம் மக்கள் மேற்கொண்டிருந்தனர்.

மருதானைச் சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகம் மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் ஆகியோரின் கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டது.

## மணலாறில் கிளைமோர் இருவர் பலி

(கொழும்பு)

மணலாறுப்பகுதியில் நேற்றுக் காலை 7.30மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரி ஒருவரும் வாகன சாரதியும் கொல்லப்பட்டனர்.

கெப்பிட்டிகொலாவ பகுதியிலிருந்து பதவியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனமொன்றே கிளைமோர்க் கண்ணிவெடியில் சிக்கியது. (ந- 5)

## ஸ்ரீ. சு. கட்சியிலிருந்து சரத்முனசிங்கா இராஜினாமா

முன்னாள் பிரதிசபாநாயகரான சரத்முனசிங்க சிறிலங்கா சுதந்திக்கட்சியின் உறுப்பினர் பதவிலிருந்தும், அக்கட்சியில் பொல்காவல அமைப்பாளர் பதவியிலிருந்தும் இராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பான இராஜினாமாக் கடிதத்தை நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-4]

## கூட்டணி கொழும்பிலும் போட்டியிடும்

டிசம்பர் மாதம் 5ஆம திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பில் இம்முறை தனித்துப் போட்டியிடவுள்ளது.

கொழும்பில் முதன்முறையாகப் போட்டியிடவுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் தங்கியுள்ள தமிழ் வாக்காளர்களின் வாக்குகளைப் பெறும் நோக்கில் போட்டியிடவுள்ளனர் என்றுதெரிவிககபபடுகிறது(வ

## டீசல் வரி முற்றாகநீக்கம்

[கொழும்பு]

தற்போது அறவிடப்பட்டு வரும் தேசியப்பாதுகாப்பு வரி7.5வீதத்தில் இருந்து6.5 வீதமாகவும் மொத்தவிற்பனைவரி ஒருவீதத்தாலும் குறைக்கப்பட்டுள்ளது.

தற்போது சீமெந்துஇறக்குமதிவரியாக அறவிடப்படுவந்த வரியில் இருந்து ஒருபைக்கற்றுக்கு 25வீதம தொடக்கம்50 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது

இதேவேளைஅத்தியாவசிய கட்டட மூலப்பொருட்களின் இறக்குமதிவரியும், டீசல்வரியும் முற்றாகரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அரசுநேற்று அறிவித்துள்ளது [வ]

(ந- 5)

## படையினர் ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நேற்றுப் பிற்பகலும், இரவும் யாழ். கடல் நீரேரிப் பகுதியை நோக்கி இராணுவத்தினர் பயங்கர ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டவண்ணமிருந்தனர்.

இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல்கள் கல்முனை, வெட்டுக்காடு, கௌதாரிமுனை ஆகிய பகுதி

(08ஆம் பக்கம் பார்க்க)

நியூயோர்க் மற்றும்வாஷிங்டன் நகரங்கள் மீதுசெப்டெம்பர் 11ல்ஒசாமாபின்லேடனால் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் தாக்குதலுக்குப் பழிவாங்கும் நோக்கத்துடன் அமெரிக்கா ஆப்கான்மீதுமேற்கொண்டுள்ள குண்டுத்தாக்குதல்களைக் கண்டித்து கொழும்பிலும், அம்பாறையிலும் உள்ள முஸ்லிம்கள் நேற்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்,

ஜும்ஆப்பள்ளிவாசலில்இடம்

(08ஆம் பக்கம் பார்க்க)

# பொ. ஐ. முன்னணிக்கு மக்களிடம் பெரும் செல்வாக்கு இருக்கிறது

## முன்னாள் அமைச்சர் மங்கள நம்பிக்கை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு தொடர்ந்தும் மக்கள் மத்தியில் பேராதரவு உள்ளதென்றுமுன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்,

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்காகக் கட்சிகள் தயாராகிவரும் இவ்வேளையில் தமது பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மக்கள் மத்தியில்பெரிய செல்வாக்கும் ஆதரவும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுச்சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஞானபண்டித பாடசாலைக்கருகில் நேற்றுக் காலை 10 மணியளவில் மோட்டார் சைக்கிள் இராணுவப் பிரிவினர்,

இளைஞர்கள் இருவரை துரத்திச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரியவருகிறது.

எனினும் சேதவிபரம் எதுவும் தெரியவரவில்லை.

அப்பகுதியெங்கும் நேற்று முழுநாளும் தேடுதல் நடவடிக்கையில் மோட்டார்சைக்கிள் இராணுவப் பிரிவினர் ஈடுபட்டிருநதனர். [இ-104]

## பல்கலைக்கழகம் மூடப்பட்டது

[கொழும்பு]

சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் நேற்றுமுதல் மறுஅறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஜே டயிள்யு விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்

பல்கலைக்கழகத்தின் விடுதிகளில்தங்கியிருக்கும்மாணவர்களை வெளியேறும் மாறும் அவர்கேட்டுள்ளார் [ந-4]

# அரசஊழியருக்கு ரூ.1200 ஒய்வூதியர்களுக்கு ரூ.750 இடைக்கால கொடுப்பனவு

(கொழும்பு)

சகல அரசாங்க ஊழியர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக ஆயிரத்து 200ரூபாயும்ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு எழுநூற்று 50 ரூபாவும் இம்மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்காகூட்டு தொழிற்சங்க சம்மேளனப்

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஆளும் கட்சியிலிருந்து கட்சிமாறியஎம். பிக்களுக்கு 3கோடி ரூ. வழங்கப்படடது

## டி. எம். ஜயரத்தின குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிலிருநது ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவிய ஒவ்வொரு நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பான வர்த்தகர்கள் தலா 3 கோடி ரூபாவை வழங்கியுள்ளதாக பொது ஜனஐக்கிய முன்னணி அரசின் பொதுச் செயலாளர்

(08ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கோப்பாய் தெற்கு, கோப்பாய் எனும் முகவரியைச் சேர்ந்த செல்லையா இராசேந்திரம் என்பவருடைய விசேட அடையாள அட்டை திருநெல்வேலி சிவன் கோவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (3838)

### தேவை

காரியாலயம் ஒன்றில் பணிபுரிவதற்கு O/L வரை அல்லது அதற்கு மேற்பட படித்த யாழ். மாநகரசபை எல்லைக்குள் வதியும் பெண் பிள்ளை தேவை. சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல-226, மே/பா 'வலம்புரி' யாழ்ப்பாணம். (3860)

### பௌதீகவியல் இணைந்தகணிதம்

பலவருட அனுபவமும் பயிற்சியும்பெற்ற ஆசிரியரினால் மேற்படி பாடங்கள் மிகச்சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள்கள்உட்பட) முழுப்பாடத்திட்டமும் மிக குறுகியகாலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தனிப்பட்டமுறையிலும் கற்பிக்கப்படும் தினசரிவகுப்புக்கள் தொடர்பு 3மணிக்குப் பின்பு மட்டும். R பாலசுப்பிரமணியம் BSc[Cey] Di.Ined17.1பிறவுண் வீதி யாழ்ப்பாணம். (3842)

## கண்ணீர்ப் பூக்களின் காணிக்கை

தோற்றம்
23
04
1985



அநியாய அழிப்பு
10
10
2001

செல்வன்

**ஸ்ரீஸ்கந்தராசா விமலேஸ்வரன்**

(உயரப்புலம் - ஆனைகோட்டை)

வீதிப்போக்குவரத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்

தாயின் கருவறையில் தனயனென வந்துதித்து
மக்கள் சேவையில் மக்கள் தொண்டனாய்
பாதுகாப்புப் பணிபுரிந்து மாதொரு பாகனாய்
மக்களிற்குத் தொண்டாற்றி வீதிதனில்படு பாதகமாய்
படுகொலை செய்யப்பட்டாய் உன்ஆத்ம சாந்திக்காய்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

நல்லூர் பிரதேச சபை
திருநெல்வேலி.

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்
ஊழியர்கள்.

(3844)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## புதிய அனுமதிகள்

### நுண்கலைமாணி (இசை/நடனம்)

மேற்படி கற்கை நெறிகளுக்கு 2000/2001 கல்வியாண்டிற்கு புதிய அனுமதிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியலை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

இவர்களுக்கான பதிவுகள்

**நுண்கலைமாணி – இசை - 18.10 2001 அன்றும்**
**நுண்கலைமாணி - நடனம் - 19.10.2001 அன்றும்**
**காலை 9.00 மணிக்கு**

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

**நுண்கலைமாணி - சித்திரமும் வடிவமைப்பும்** கற்கை நெறிக்கு எழுத்துப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு தகுதியானவர்களின் பெயர்ப் பட்டியலையும் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

இவர்களுக்கான **நேர்முகப்பரீட்சை 17.10.2001 காலை 9.00 மணிக்கு** பல்கலைக்கழக சபை மண்டபத்தில் நடைபெறும்.

இவர்கள் அனைவருக்குமான கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பதிவாளர்

யாழ், பல்கலைக்கழகம். (C/2718)

## கேள்வி அறிவித்தல்

### அரசினர் பொதுவைத்தியசாலை, யாழ்ப்பாணம்

### அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் - 2002

2002 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் அழுக்குத்துணிகளைச் சலவை செய்வதற்கான கேள்வி மனுக்கள் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை கேள்விச்சபை தலைவரினால் கோரப்படுகின்றன.

2. கீழே காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் பெறுமதிக்கு பொது 170 படிவத்தில் சான்றிதழையும் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புக் கட்டணம் ரூபா 300/- ஐ இவ் வைத்தியசாலை அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பொது 172 படிவத்திலான பற்றுச்சீட்டையும் தமது தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து 2001. 10. 29 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை கேள்விப் பத்திரங்களை இவ் வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், அரசினர் பொது வைத்தியசாலை, இலக்க 22

| பிரிவு | மாதாந்தம் சலவை செய்ய வேண்டிய துணிகளின் சராசரி | தடவைகள் | சொத்துக்கள் சான்றிதழ்பெறுமதி ரூபா | செயலணிப் பிணை ரூபா |
|---|---|---|---|---|
| 1 | 10795 | 15 | 9,000/- | 2,000/- |
| 2 | 11345 | 04 | 12,000/- | 2,000/- |
| 3 | 16031 | 04 | 16,000/- | 3,000/- |
| 4 | 109122 | 15 | 43,000/- | 8,000/- |
| 5 | 5920 | 04 | 9,000/- | 2,000/- |
| 6 | 695 | 15 | 1,000/- | 200/- |
| 7 | 4684 | 10 | 6,000/- | 1,000/- |
| 8 | 1408 | 04 | 1,000/- | 300/- |

03) கேள்விப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறை முத்திரை இடப்பட்டு, இடப்பக்க மேல் மூலையில் '2002 ஆம் ஆண்டில் அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை 'எனக் குறிப்பிட்டு 2001.10.30 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்புகிடைக்கக் கூடியதாகத்' தலைவர்யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலைக் கேள்விச் சபை அரசினர் பொது வைத்தியசாலை யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டிக்குள் இடப்படுதல் வேண்டும்.

04) கேள்வி மூடப்பட்ட அதே சந்தர்ப்பத்தில் திறக்கப்படும் என்பதுடன் கேள்வியாளருக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்றுக் கொண்டுள்ள பிரதிநிதி ஒருவருக்கு அச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

05) கேள்வி மனுக்களுடன் ஏற்புடைய பெறுமதிக்கு கேள்விப் பிணை அல்லது அப்பெறுமதிக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு பணம் வைப்பிலிடப்பட்டுப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடன் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் சான்றிதழொன்றும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

06) கேள்வி ஆவணங்களைக் கட்டணம் எதுவும் செலுத்தாது இவ்வைத்தியசாலை அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

07) அரசாங்கத்தின் ஒப்பந்த நிபந்தனைகளை மீறிக் குற்றக் குறியீடுகளைப் பதிவேடுகளில் இடப்பட்டவர்களுக்குக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

08) மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
(செல்வி) நவமலர் கனகரத்தினம்
பணிப்பாளர்

பொது வைத்தியசாலை.
யாழ்ப்பாணம். 11.10.2001.

(G 2781)

## துயர் பகிர்வு

### திருமதி நமசிவாயம் மனோன்மணி

(8 ம் வட்டாரம் நயினாதீவு)

தீவுகள் தெற்கு (வேலணை) பிரதேச சபைத் தலைவர்

திரு. ந. கருணாகரகுருமூர்த்தி (J.P.U.M) அவர்களினதும்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன வடபிரதேச முகவர்

திரு. ந. கதிரவேலு (J.P) அவர்களினதும்

பாசமிகு தாயார்

### நமசிவாயம் மனோன்மணி

அவர்கள் காலமானதையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் நாமும் பங்கேற்றுக் கொள்வதுடன் அம்மையாரின் ஆத்ம சாந்திக்காக நயினை நாகபூஷணி அம்மனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி

நயினை மக்கள் சார்பில்

நிர்வாகம்

ஸ்ரீ கணேச சனசமூக நிலையம்

நயினாதீவு-06 (C/2720)

## சனீஸ்வரனை வழிபட்டுக் காரிய சித்திபெற

# புரட்டாதிச் சனி விரதம் பெரிதும் உகந்தது.

புரட்டாதி கடைசிச் சனியை யொட்டிய கட்டுரை.

சனியைப்போல் கொடுப்பவனும் இல்லை; கெடுப்பவனும் இல்லை என்பது பழமொழி. ஒருவருக்கு பொங்கு தசை வந்துவிட்டால் பொன் கொழிக்கும். மங்கு சனி தசை வந்துவிட்டால் தரித்திரம் கூத்தாடும். பல நோய்கள் வரும். சனிக்கிழமை விரதமிருந்து ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்கு ஸஹஸ்ர நாமார்ச்சனை வழிபாடு செய்தால் பலவகை நன்மைகள் இட்டும் என்பது ஐதிகமாகும். புரட்டாதி (கன்னி மாதம்) மாதத்தில் வரும் சனிக்கிழமை தோறும விரதமிருந்து வழிபாடு செய்வது சனீஸ்வரனுக்குப் பிரீதி தருவதாகும்.

### சனிபகவான் அவதாரம்

சூர்யனுக்கும், ஸம்ஜ்ஞா தேவி என்ற ஸஞ்சிகைக்கும் பிறந்தவர்கள் வைவஸ்வதமனு, யமன், யமுனை என்ற மூன்று சேய்கள். சூரியனது வெப்பத்தை ஆறற மாட்டாதவளாய் சூரியனுக்கே தெரியாமல் தன் தந்தை வீட்டுக்குப் போக எண்ணி ஸஞ்சிகை தன் நிழலையே ஒரு பெண்ணாகச் செய்து அங்கு விட்டுச் சென்றாள். இந் நிழல் உருவத்துக்கு சாயாதேவி என்று பெயர். ஸஞ்சிகையின் விருப்பப்படி தான் வேறு ஒருத்தி என்பதை இவள் சூரியனுக்கு தெரிவிக்கவில்லை. சாயா தேவி சாவர்ணீ என்ற மநுவையும், சனி பகவானையும, பத்திரை என்னும் பெண்ணையும் ஈன்றாள்.

சனிபகவான் காசிக்குச் சென்று தன் பெயரினால் ஒரு லிங்கத்தை நிறுவி பூஜை செய்து வழிபட்டான்; அதன் பயனாக கிரகபதவியை அடைந்து வாழலானான். சனி பகவானுக்கு கால் சற்றே சிறுத்திருந்ததால் மெல்ல நடப்பான்.

மகர ராசிக்கும், கும்ப ராசிக்கும் அதிபதியான சனி பகவான் நவக்கிரக மண்டலத்தில் சூரியனுக்கு மேற்கே தனுசின் உருவங்கொண்ட மண்டலத்தில் உறைபவன்.

### கோசாரத்தில் சனி

கோசாரத்தில் அவரவர் பிறந்தராசிக்கு 12, 8, 1 ஸ்தானங்களில் சனி, சூரியன், செவ்வாய், குரு என்னும் நான்குகிரகங்களும் சஞ்சாரம் செய்யும்போது, மரணபயம், இடமாற்றம், தொழில் இழப்பு, பணவிரயம், தொழில் நஷ்டம், அலைச்சல் என்பன ஏற்படக் கூடும்.

சனிபகவான் அவரவர் ராசிக்கு 12, 8, 1 இல் சஞ்சாரம் செய்யும்போது ஜபஹோம - தானங்களாகிய சாந்திகளைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் மேற்கண்ட சிரமங்கள் நீங்கும்.

### ஏழரைச் சனி

ஜாதகப்படி அவரவர் பிறந்த சந்திர ராசிக்கு 12, 1, 2 என்னும் மூன்று ராசிகளில் சனிபகவான் சஞ்சாரம் செய்யும்போது ஏழரைச்சனி என்ற பெயரால் குறிக்கப்படுகின்றார்.

சனிபகவான் ஒவ்வொரு ராசியிலும் $2\frac{1}{2}$ வருடங்கள் சஞ்சாரம் செய்வார். இதற்கேற்ப மூன்றுராசிகளில் அதாவது ஜன்மராசியிலும், 12, 2 ஸ்தானங்களிலும் சஞ்சாரம் செய்யும் காலமே ஏழரைச்சனி ($7\frac{1}{2}$ வருடம்) யின் காலமாகும. இக்காலத்தில் நோய்கள், பணநஷ்டம், பலவித கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும். என சோதிட சாஸ்திரம் கூறுகின்றது.

### திருநள்ளாறு வழிபாடு

சனிதோஷம நீங்க திருநள்ளாறு சென்று அங்குஉறையும் தர்பாரேண்ணீஸ்வரரை வழிபாடு செய்வது விஷேட பலனைத் தரும். திருநள்ளாறு தலவழிபாடு தடைகளை நீக்கி சகல காரியசித்தியையும் தரும் என்பது பெரியோர் வாக்கு.

**கா. கார்த்திகேசு**

திருநள்ளாறு தலத்தில் ஸ்ரீ சனீஸ்வர பகவானுக்குத் தனிக்கோயில் உண்டு.

திருநள்ளாற்றில் 13 தீர்த்தங்கள உள்ளதாக தல புராணம் கூறுகின்றது. இவற்றில் நளதீர்த்தம், பிரம்மதீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், அகஸ்தியர் தீர்த்தம், அம்ஸதீர்த்தம் ஆகியவை மட்டுமே இன்று உள்ளன. அவற்றுள் கோயிலுக்கு வடமேற்குத் திசையில் உள்ள நள தீர்த்தத்தை விஷேடமாகக் குறிப்பிடுகின்றனர். இதில் நீராடினால் சகலவித தோஷங்களும், பீடைகளும் விலகும்.

### நளனுக்கு கலி நீங்கியமை

நிடத நாட்டு அரசன் நளச்சக்கரவர்த்தி விதர்ப்ப நாட்டு அரசனின் மகளாகிய தமயந்தியை சுயம்வர விவாகம் செய்து வாழ்ந்து வந்தான். சுயம்வரத்திற்கு வந்திருந்த தேவர்கள் அவள் தங்களுக்கு கிடைக்காததால் நளன் மேல் பொறாமை கொண்டனர். சனீஸ்வரனை நாடி நளனை துன்புறுத்த வேண்டினர். அவரும் அதற்குடன்பட்டார், சனீஸ்வரன், நளனை சூதாட்டத்தில் ஈடுபடுத்தி பொருளனைத்தையும் இழக்கச் செய்து! மனைவியோடு காடு செல்லச் செய்தார். சனிபகவானால் பீடிக்கப்பட்டிருந்த நளன், என்ன செய்கிறோம் என்பதை உணராமல் காட்டில் மனைவியை தனியாக விட்டுப் பிரிந்தான். வழியில் கார்க்கோடன் என்னும் பாம்பால் கடியுண்டு உரு மாறினான், இறுதியாக அயோத்தி அரசனிடம் சென்று தேரோட்டியாக வேலைபார்த்தான். பின் எவ்வளவோ கஷ்டங்களுக்கு பின் மனைவி மக்களை சேர்ந்தும் சித்தப் பிரமை பிடித்தவன் போல காணப்பட்டான் பின் அவன் நாரதர் சொற்படி திருநள்ளாறு சென்று தீர்த்தமாடி வழிபாடு செய்து சனி விலகப் பெற்று நற்கதி பெற்றான்.

புரட்டாதி மாத சனிக்கிழமை தோறும் ஈஸ்வரன் என்று சிறப்பிக்கப்படும் சனீஸ்வரருக்கு ஆலயங்களில் வழிபாடு செய்து சுகம் பெறுவோமாக. □

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 30மணிக்கு திருநெல்வேலியிலுள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (உ)

## போட்டி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தால் நடாத்தப்பட்டு வந்த அரச திணைக்களங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ''லீக்'' முறையிலான போட்டிகள் இன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும், தவிர்க்கமுடியாத காரணத்தினால் பின் போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-19,9]

## சந்தைக்கு அடிக்கல்

[மந்திகை]

புனர்வாழ்வு அமைச்சின் நிதியுதவியுடன் முனைப்பகுதியில் 5இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள மொத்த மீன் விற்பனைநிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. [எ-23]

## புதிய வகுப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகினால் நடாத்தப்படும் 'உயர் ஆங்கில அடிப்படைக் கற்கை நெறி' புதியபிரிவிற்கான ஆரம்பவகுப்பு இன்றுசனிக்கிழமை காலை 9 00 மணிபுவியியல் துறைமண்டபத்தில் நடைபெறும்.

இந்தகற்கை நெறி புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் அ.சிவசந்திரன் ஆரம்பித்து வைப்பார். (சே-2

## இளைஞர் நட்புறவுப் பாலம்

# யாழ்.மாவட்டத்திற்கு அழைப்பில்லை

(ஈச்சமோட்டை)

தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தினால் திருமலையில் நேற்று முதல் நடத்தப்பட்டு வரும் இளைஞர்களிடையேயான நட்புறவுப் பாலமும் பயிற்சிப் பட்டறையும் நிகழ்விற்காக யாழ்.மாவட்டத்தில் இருந்து எவரும் அழைக்கப்படவில்லை என தெரியவந்துள்ளது.

திருமலை, அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டத்தைச்சேர்ந்த இளைஞர்பிரதிநிதிகளுக்கென திட்டமிடப்பட்ட இப் பயிற்சிப் பட்டறை தொடர்பாக யாழ். மாவட்டத்தவர்க்கு எந்தவொரு அறிவித்தலும் வழங்கப்பட வில்லையாம்.

மருத்துவ, சுயவேலை வாய்ப்பு, முகாமைத்துவபயிற்சிப் பட்டறைகளும், இளைஞர் நட்புறவு நிகழ்வுகளும் எதிர் வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இவ்வாறான பாகுபாடானபோக்குகுறித்து யாழ்.மாவட்ட இளைஞர்மத்தியில் மிகுந்த அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (உ-59)

## வறிய மாணவர்களுக்கு போஷாக்குத் திட்டம்

### கல்வி அமைச்சு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

போஷாக்கு குறைவான மாணவர்களுக்கு மதியஉணவு வழங்கும் திட்டம் ஒன்றினை கல்வி அமைச்சு அமுல் படுத்த விருக்கிறது.

வறுமையாலும், போர்ச்சூழலினால் ஏற்பட்ட இடப் பெயர்வுகளினாலும் இன்னல்களுக்கு ஆளாகி வரும் மாணவர்களின் போஷாக்கு மட்டத்தினை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

பொருள்வளமும், ஏனைய உதவிகளும் காணப்படும் பாடசாலைகள் நீங்கலாக கிராமப்புற பாடசாலைகள் இத்திட்டத்தில் இணைக்கப் படவுள்ளன.

இது தொடர்பான சுற்று நிருபம் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுளளது. (உ-19,9)

## அளவெட்டியில் 5 ஆயிரம் பனைவிதை நடும் திட்டம்

(அளவெட்டி)

அளவெட்டிப் பகுதியில் 5 ஆயிரம் பனை விதைகள் நடும் திட்டம் நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்டது.

பனம்பொருள் அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் அளவெட்டி முற்போக்கு வாலிபர் முன்பள்ளியும் நூல் நிலையமும் இப்பணியை முன்னெடுத்துள்ளன.

இதன் முதற்கட்டமாக அளவெட்டி பனாக்குளக் கட்டில் மூவாயிரம் விதைகள் நாட்டப்படவுள்ளன. (உ-237)

## ரயில் தடம் புரண்டது

[கொழும்பு]

நேற்று முன் தினம் இரவு 10.00 மணிக்கு கொழும்பில் இருந்து பதுளை நோக்கி சென்று கொண்டிருந்த ரயில் தடம் புரண்டது.

ஆனாலும் சேதம் எதுவும் இடம்பெறவில்லை எனத் தெரியவருகிறது. [உ-7]

## கணிப்பீட்டு வழிகாட்டிச் சுற்று நிருபம் தனிச் சிங்களத்தில்

[யாழ்ப்பாணம்]

கல்வி அமைச்சினால் நடத்தப்படும் கணிப்பீட்டு வழிகாட்டல் தொடர்பான சுற்று நிருபம் தனிச்சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத்தெரியவந்துள்ளது.

யாழ் கல்வித்திணைக்களத்திற்கு உட்பட்ட சகல கோட்டங்களுக்கும் இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும, இதனால் கணிப்பீட்டு வழிகாட்டல்களை மேற்கொள்வதில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (உ-19,9

## பல்கலைக்கழக பதிவாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால்நடாத்தப்படும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்களுக்கும், உதவிப்பதிவாளர்களுக்குமான ஒருநாள் பயிற்சிப் பட்டறை கொழும்பு தலைமையகத்தில் 18ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ளவென யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ஒருவரும் உதவிப்பதிவாளர் ஒன்பது பேரும் செல்லவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை துணைவேந்தர் பேரா. பாலசுந்தரம்பிள்ளை செய்துள்ளதாக யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-2)

## சுக வாழ்வு

தங்களது சுதேச கலாசாரத்தினால் கட்டுப்படுத்தப்படாத ஒரு மக்கள் கூட்டம் உருவாகியுள்ளது.

இந்நிலை தாராளமான பாலியல் உறவுகளிற்கும் மேக நோய்களினது இலகுவான பரவலிற்கும் வழி வகுக்கின்றது.

(எயிட்ஸ் வருமுன் காப்போம்)

தரிசனம்.

## செய்தித் துளிகள்

### மத்திய மாகாண சபையில் அமளி

(கொழும்பு)

மத்திய மாகாண சபை நேற்று முன்தினம் காலை கூடியபோது சபையில் ஏற்பட்ட அமளி துமளி காரணமாக சபைக் கூட்டம் எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண சபைத் தலைவர் மஹிந்த அபயக்கோன் பதவி விலக வேண்டுமெனக் கோரி எதிர்க்கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்படாததை அடுத்தே சபையில் அமளி துமளி ஏற்பட்டது.

(ந-5)

### உதைபந்தாட்ட வீரர் காயம்

(மந்திகை)

இரு கழகங்களுக்கிடையில் நடைபெற்றஉதைபந்தாட்ட போட்டியின் போது இரண்டு வீரர்கள் மோதுண்டதால், வீழ்ந்து காயமடைந்த வீரர் ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய் தெற்கைச்சேர்ந்த ஆனந்தராஜா வைகுந்தன் (வயது-29) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

(செ-23)

### சேமிப்பு கணக்கு ஆரம்பம்

[மந்திகை]

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக அபிவிருத்தி தொண்டர்களினால் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியால் சேமிப்பு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொண்டர்களிடையே சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் நோக்குடனும்,

பயிற்சி முடிவுற்றபின் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதை நோக்கமாகக் கொண்டும் மாணவர்களிடையே இத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

மாதாந்தம் 500 ரூபாவுக்கு குறையாது வைப்பிலிடப்படுவதாகவும் இத் திட்டத்தில் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் இணைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-23)

### கருங்குளவியினால் மக்கள் அச்சம்

(இருபாலை)

இருபாலை டச்சு வீதியில் முழுமதி சனசமூக நிலையத்திற்கு அண்மையில் உள்ள பனைமரம் ஒன்றில் உள்ள கருங்குளவிக் கூட்டிலிருந்து பறந்து திரிகின்ற குளவிகளினால் பொதுமக்கள் மத்தியில் அச்சம் நிலவுகின்றது.

இப்பகுதி அதிக குடியிருப்புக்கள் நிறைந்த பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

(செ-221)

### கசிப்பு கடத்தியோர் பிடிபட்டனர்

(நவக்கிரி)

கசிப்புக் கடத்தலில் நெடுநாட்களாக ஈடுபட்டு வந்த இருவரை கடந்த புதனன்று பொது மக்கள் மடக்கிப் பிடித்து கோப்பாய் மத்தி கிராம சேவகரிடம் ஒப்படைத்ததன் பேரில் பின்னர், பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அச்செழுவில் இருந்தும் இருபாலை கிழக்கில் இருந்தும் கோப்பாய் பகுதிக்கு கசிப்பு கடத்திய இருவரே பொதுமக்களால் 80 லீற்றர் கசிப்புடன் பிடிக்கப்பட்டனர்.

(உ-233)

### கிரனைட் மீட்பு

(வவுனியா)

வவுனியா தனியார்சொகுசு பஸ் தரிப்பிடமொன்றில் கிரனைட் ஒன்று நேற்முன்தினம் படையினரால் கண்டெடுக்கப்பட்டு செயலிழக்க செய்யப்பட்டுள்ளது.

மரக்கட்டை ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் கிரனைட் பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டு படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

(இ-05)

### கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

முதியோர் தினத்தையொட்டியநல்லூர் கோட்டப்பாடசாலைகளுக்கிடையிலான கட்டுரைப் போட்டி, இன்றுமுப. 10.00மணிக்கு யாழ், இந்து மகளிர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(உ-9,19)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**பட்டமளிப்பு விழா புகைப்படங்கள்**

06-10-2001 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை மாணவர்கள் பின்வரும் தினங்களில் யாழ். பல்கலைக்கழக கல்விக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

| திகதி | நேரம் காலை 9.00-12.00 | நேரம் மாலை 2.00-4.00 |
|---|---|---|
| 15-10-2001 | கலைபீடம் | நுண்கலைத்துறை |
| 16-10-2001 | வர்த்தகத்துறை | முகாமைத்துறை |
| 17-10-2001 | விஞ்ஞானம் 98/99 | விஞ்ஞானம் 99/2000 |
| 18-10-2001 | மருத்துவம் | சித்த மருத்துவம் |
| 19-10-2001 | மீன்பிடியியல் கற்கைநெறி உடற்கற்கைநெறி | கல்வியியல் பட்டப்பின் படிப்பு, பொது நிர்வாக பட்டப்பின் படிப்பு, முதுமெய்யியல்மாணி, முது தத்துவமாணி மாணவர்கள் |

யாழ். பல்கலைக்கழகம். பதிவாளர்

[C-2719]


# ஆடிக் கலவர சோக நிகழ்வுக்கு ஜே. ஆரின் அசிரத்தையே காரணம்

## முன்னாள் பா. உ. சாட்சியம்

(கொழும்பு)

ஆடிக் கலவரத்தின் முதல் நாள் இரவு 479 தமிழர்கள் கொலை செய்யப்பட்டமைக்கு அன்று ஜனாதிபதியாகஇருந்தஜே.ஆர்.ஜேவர்த்தனாவின் அசிரத்தையே காரணமென கம்யூனிஸ் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டி. குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இனவன்முறைகள் தொடர்பான மெய்யாணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் சாட்சியமளிக்கையில், மேலும் தெரிவித்திருப்பதாவது; கலவரங்கள் ஏற்பட்டிருந்த சமயம் ஜெயவர்த்தனா ஊரடங்கை அமுல்படுத்தவில்லை. தடுப்பதற்கு துரித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதை செய்திருந்தால் தொடர்ந்து நடைபெற்ற வன்முறையையாவது தடுத்திருக்கலாம்.

இத்தகைய இனவன்முறையை தடுக்காமல் விட்டமை தற்போதைய யுத்தத்திற்கு முக்கிய காரணமெனவும் தெரிவித்தார். (உ-4)

## இராசி பலன்

13.10.2001

புரட்டாதி -27 சனிக்கிழமை

ஏகாதசி மு.ப 10.53 வரை

மகம் மு.இ 8.21 வரை

இராகுகாலம 9.2 - 10.32

நல்லநேரம் 3.2 - 4.32

அமிர்த சித்தம

ஏகாதசிவிரதம்

**மேடம்**

தொழில் சிறப்பு, குடும்பக் கவலை, முயற்சி கைகூடும், மனச்சோர்வு.

**இடபம்**

ரோகபயம், கல்விச்சிறப்பு, காரியதாமதம், தனவரவு.

**மிதுனம்**

காரிய நன்மை, அந்நியர் சந்திப்பு, குடும்பசுகம், கூட்டு முயற்சி.

**கடகம்**

வாக்குக்கலகம், மாதர் உதவி, பொருள் விரயம், காரியம் கைகூடும்.

**சிங்கம்**

நல்லமுயற்சி, ஆழ்ந்த சிந்தை, பெரியோர் ஆசி, வஸ்திர சுகம்.

**கன்னி**

பிரயாணம், மனஸ்தாபம், பொருள் விரயம், காரிய தாமதம்.

**துலாம்**

காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, பொருள சேர்க்கை, குடும்பநன்மை.

**விருச்சிகம்**

நல்ல செய்தி, உற்சாகம், முயற்சி கைகூடும், தொழில் நன்மை.

**தனுசு**

கட்டுப்பாடு, புதிய முயற்சி, காரிய அனுகூலம், மனச்சஞ்சலம்.

**மகரம்**

எதிர்பாராத பிரச்சினை, வியாதி, காரியத் தடங்கல், நிலைமாற்றம்.

**கும்பம்**

செல்வாக்கு, தனவரவு, கௌரவம், காரியம்கைகூடும.

**மீனம்**

சுவவாழ்வு, முயற்சிநன்மை, சந்தோசம, திடீர் பயணம்.

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது.)

வளவன்

## படையினர் பாவனையில் இருந்த மலகூட குழியில் இருந்து வெடிப்பொருட்கள் மீட்பு

(மந்திகை)

புத்தூர் பகுதியிலுள்ள வீட்டு மலசல கூட குழியில் இருந்து பொதியிடப்பட்ட நிலையில் வெடிப்பொருட்கள் இனம் காணப்பட்டதையடுத்து அச்செழு இராணுவ முகாம் பொறுப்பதிகாரிக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டதன் பேரில் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

புத்தூர் ஆவரங்கால் 10ம் கட்டையடியிலுள்ள நல்லையா என்பவருடைய வீட்டில் அண்மையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேற்படி வீடு அமைந்துள்ள பகுதி கடந்த காலங்களில் படையினரின் பாவனையில் இருந்ததாகவும் அண்மையில் இப்பகுதியை விட்டு படையினர் வெளியேறியதன் பின்னர் வீட்டு உரிமையாளர் மலக்குழியைத் துப்பரவு செய்த வேளையிலேயே மேற்படி வெடிப்பொருள் மீட்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

(உ-23)

## ஒரே பாடசாலை மாணவர் மூவர் கைது

(கொழும்புத்துறை)

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய மாணவர்கள் மூவர் கடந்த வியாழனன்று காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நடராஜா அகிலகுமார் என்ற மாணவர் ஆனந்தன் வடலி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் வைத்தும், செல்வரட்ணம் கமல்ராஜ், சிவஞானம் சிவகுமார் ஆகியோர் இராசாவின் தோட்டவீதியில் வைத்தும் கைது செய்யப்பட்டிருப்பதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி மாணவர்கள் மூவரையும் அவரவர் பெற்றோர் பார்வையிட பொலிஸார் அனுமதித்ததாகவும் தெரியவந்துள்ளது.

(உ-223)

## யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கொழும்பு விரைவு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் ஆணையாளரின் அவசர அழைப்பின் பேரில் யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் கி. நடராஜா நேற்று கொழும்பு பயணமாகியுள்ளார்.

குறுகிய கால அறிவிப்பில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதிஇடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல்களுக்காகவே இவர் அவசரமாக அழைக்கப்பட்டுள்ளதாய் தெரியவந்துள்ளது.

இதேவேளை நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் காலம் இம்மாதம் 20-27 ஆம் திகதி வரை என்பது குறிப்பிடத்தக்கது.

[உ-19 9]

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(தொடர்ச்சி)

ஒக்டோபர்மாதம் 8 ஆம்திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

213461 ஏ
213484 ஏ
213485 ஏ
213487 பி
213492 ஏ
213500 ஏ
213510 ஏ
213514 பி
213558 ஏ
213564 ஏ
213577 ஏ
213616 எ
206161 சி
198817 பி
203461 ஏ
203890 ஏ
205314 பி
205519 ஏ
205779 பி
205811 ஏ
205811 சி
205863 ஏ
205867 ஏ
206161 ஏ
207903 பி
207951 ஏ
208907 ஏ
208909 ஏ
209019 பி

213461 பி
213484 பி
213487 ஏ
213487 சி
213499 ஏ
213509 ஏ
213514 ஏ
213549 ஏ
213559 ஏ
213564 பி
213578 ஏ
206161 பி
198817 ஏ
201221 ஏ
203461 பி
205314 ஏ
205314 சி
205740 ஏ
205811 பி
205831 ஏ
205863 பி
206052 ஏ
207903 ஏ
207903 சி
207992 ஏ
208907 பி
209019 ஏ

**நல்லூர்**

202525 ஏ
206376 ஏ
206428 ஏ
211828 பி
211969 பி
211969 டி
122012 ஏ
122012 சி
212013 ஏ
212014 ஏ
212161 பி
212220 ஏ
213262 ஏ
213304 ஏ
213354 ஏ
213377 ஏ
213386 ஏ
213428 பி
213437 ஏ
213456 ஏ

205173 ஏ
206413 ஏ
211928 ஏ
211969 ஏ
211969 சி
211969 ஈ
122012 பி
122012 டி
212013 பி
212161 ஏ
212172 ஏ
212244 ஏ
213283 ஏ
213304 பி
213354 பி
213377 பி
213428 ஏ
213428 சி
213437 பி
213456 பி

(தொடரும்)

## இன்று ஒரு தகவல்

# எல்லோரும் தலைவரே!

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். பத்து ஊர்த்தலைவர்கள் மிக ஒற்றுமையாக இருக்கின்றனர் என்று கேள்விப்பட்டான் அவன். அவர்கள் உண்மையிலேயே ஒற்றுமையானவர்களா என்பதை அறிய விரும்பினான். அவர்கள் அனைவரையும் உடனே தன்னைச் சந்திக்குமாறு ஓலை அனுப்பினான். பத்து ஊர்த்தலைவர்களும் அரண்மனைக்கு வநதனர். அவர்களுடன் இனிமையாகப் பேசிக் கொண்டிருந்தான் அரசன். ''இன்று இரவு நீங்கள் தங்குவதற்காக ஓர் அறை ஏற்பாடு செய்துள்ளேன் தங்குங்கள். நாளை உங்களைப் சந்திக்கிறேன்'' என்று புறப்பட்டான் அரசன்.

எல்லோரும் தங்கள் அறைக்கு வந்தனர். அங்கே பட்டுமெத்தை விரிக்கப்பட்ட ஒரு கட்டில் இருந்தது. 'இதில் ஒருவர் தான் படுக்கமுடியும். நம்மில் யார் படுப்பது' என்று கேட்டார் ஒருவர். 'நம்மில் யார் வயதில் மூத்தவரோ அவர் இதில் படுக்கட்டும்' என்றார் இன்னொருவர். 'நம் ஊரில் தான் நாம் பெரியவர் சிறியவர் என்பதெல்லாம். இங்கே நாம் எல்லோரும் சமம். நம் ஒற்றுமையைக் குலைப்பதற்கான சூழ்ச்சி இது' என்றார் மற்றொருவர்.

'யாருமே கட்டிலில் படுக்காவிட்டால் அதுவும் நன்றாக இருக்காதே' என்றார் வேறு ஒருவர். என்ன செய்யலாம் என்பது குறித்து எல்லோரும் சிந்தனையில் ஆழ்ந்தனர் அவர்களில் ஒருவர் 'நான் நல்ல வழி கண்டு பிடித்து விட்டேன். நாம் அனைவரும் கட்டிலைச் சுற்றிப் படுத்துக் கொள்வோம். நம் கால்களைக் கட்டிலின் மேல் போட்டுக் கொண்டு தூங்குவோம். அப்படிச் செய்தால் நம்மிடையே ஏற்றத்தாழ்வே இருக்காது' என்றார். அவர் சொன்னபடியே எல்லோரும் கட்டிலின் மேல் கால்களைப் போட்டபடி தூங்கினார்கள் காலையில் அங்குவந்த அரசன் அவர்கள் படுத்திருக்குப் கோலத்தைக் கண்டு வியப்பு அடைந்தான். அவர்களும் பரபரப்புடன் எழுந்து அரசனை வணங்கினார்கள். 'நீங்கள் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டானவர்கள்' என்று அரசன் அவர்களைப் பாராட்டினான்.

பேராசிரியர் எ. சோதி

# சிங்களவரின் பிரித்தாளுர் சூழ்ச்சிக்கு தமிழ்மக்கள் பலியாகக் கூடாது

## தமிழர் மறுமலர்ச்சிக் கழகம் அறிக்கை

(கொழும்பு)

சிங்களப் பேரினவாதத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு தமிழ் மக்கள் மீண்டும் பலியாகக் கூடாதென்று தமிழர் மறுமலர்ச்சிக்கழகம் வெளியிட்டுள்ளஅறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

சிங்களப் பேரினவாதிகள் பிரித்தாளும்ஆட்சியைவெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு தேர்தலை ஒருகளமாகப் பயன்படுத்துகின்றனர்.

தமிழ்மக்களுடைய நியாயமான உரிமைகளை முழுமையாக வென்றெடுப்பதற்காக ஒருபொதுஜனநாயகவேலைத்திட்டத்தின் அடிப்படையில் அனைத்துதமிழ்க் கட்சிகளும் ஒருதமிழ்த் தேசிய சக்தியாக ஓரணியில் திரளவேண்டும்.

இக்கோரிக்கையை எமது மக்களின் விடிவின்பேரால் கேட்டுக்கொள்கிறோமென்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுளளது. (இ)

# புதிய நூலகமும் கணனி செயற்பாட்டறையும்

(இருபாலை)

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் எட்டு இலட்சம்ரூபாசெலவில் புதிய நூலகமும் அதனோடிணைந்த கணனி செயற்பாட்டறையும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி கல்வித்திணைக்களத்தினால் ஒதுக்கப் பட்டிருந்தது

இக்கட்டடத்திறப்பு விழா அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. (செ-221)

# கூட்டம்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக்கழகங்கள் இணைந்து சங்கம் ஒன்று அமைப்பது தொடர்பான கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதிசெவ்வாய்க்கிழமைஉதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பிரதேச செயலர் வி. பி. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபறவுள்ளது.

இக் கூட்டத்தில், இதுவரை பதிவு செய்யாது இயங்கும் விளையாட்டுக் கழகங்களை பதிவு செய்வது தொடர்பாகவும் ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

★ ★ ★

(மந்திகை)

வடமராட்சிப்பகுதியிலுள்ள மென்பந்து துடுப்பாட்ட வீரர்களை இணைத்து மென்பந்துதுடுப்பாட்டவீரர்கள்சங்கம் அமைப்பது தொடர்பான கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 00 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூ

# செயல்முறைப் பரீட்சை நடைபெறும் தினங்கள்

(மீசாலை)

அல்லாரை அ.த.க. வித்தியாலயத்தில் இவ்வருடம் க.பொ.த.[சா-த] பரீட்சைக்கு தோற்றுமமாணவர்களுக்கானசெய்முறைப்பரீட்சைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன.

சங்கீதம்,விவசாயம், விஞ்ஞானம்எதிர்வரும் 15 ஆம் 16ஆம் திகதிகளிலும், மனைப்பொருளியல் 18 ஆம் 19 ஆம் திகதியிலும் நடைபெறவுள்ளன

மாணவர்கள் உரிய நேர அட்டவணைக்கு அமைவாக சமுகமளிக்கும்படி அதிபர் அறிவித்துள்ளார். (செ-229)

முதியோர் தினத்தை முன்னிட்டு

# தென்மராட்சி வலயத்தில் நடத்தப்பட்ட போட்டி முடிவு

(மீசாலை)

தென்மராட்சி கல்வி வலயத்தில் முதியோர் தினத்தை முன்னிட்டு பாடசாலைமாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை கட்டுரைப் போட்டி முடிவுகள் வருமாறு;

## கட்டுரைப் போட்டி

**பிரிவு - 1**

முதலாம் இடம்

அ கோகுலன் இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்.

இரண்டாம் இடம்

சி. நிரோஜினி அல்லாரை அ.த.க. பாடசாலை;

மூன்றாம் இடம்

சி. திசோறீற்றா, சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை;

**பிரிவு 2**

முதலாம் இடம்

ப. ஜனனி சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம்

வ. றமணன் வீரசிங்கம் மகாவித்தியாலயம்,

மூன்றாம் இடம்

ஆ. கஜந்தினி உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.

**பிரிவு- 3**

முதலாம் இடம்

ஜெ ஜெனனி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்;

இரண்டாம் இடம்

விக்னேஸ்வராவித்தியாலயம்;

இரண்டாம் இடம்

அ றெஜினியா கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

மூன்றாம் இடம்

த சஜிந்தா சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை;

**பிரிவு -2**

முதலாம் இடம்

மு சத்தியப்பிரியா வரணி வடக்கு சைவப் பிரகாசவித்தியாலயம்;

இரண்டாம் இடம்

ச ஜனார்த்தனி சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

மூன்றாம் இடம்

ச. தச்சாயினி கைதடி முத்துக் குமாரசாமி மகாவித்தியாலயம்;

**பிரிவு- 3**

முதலாம் இடம்

ஐ. பிரேம்குமார் சாவகச்சேரி இந்துக் கல்லூரி

இரண்டாம் இடம்

வ. பிரேமினி மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்.

மூன்றாம் இடம்

ஜெ விலோஜிகா கைதடி முத்துக் குமாரசாமி மகா வித்தியாலயம்

**பிரிவு 4**

முதலாம் இடம்

ம. கேமப்பிரியா சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம்

ஞா. கிருபதீசன் கைதடி

சிங்களக் கட்சிகளில்

# தமிழர் போட்டியிடுவதை தடுப்பதற்கு முயற்சி

(மட்டகளப்பு)

டிசம்பர் 5ம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்துதெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் அனைவரும் போட்டியிட விருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிங்களப்பேரினவாத தேசியக் கட்சிகளின் சார்பில் வடக்குக் கிழக்கில் தமிழர்கள் போட்டியிடுவதை தவிர்த்துக் கொள்வதற்கான தீவிர முயற்சிகளை கிழக்கிலங்கைபுத்தி ஜீவிகள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் திரை மறைவில் மேற்கொண்டு வருவதாகவும் எமது மட்டக்களப்பு செய்தியாளர் அறிவிக்கிறார்.

தேசியக் கட்சிகளில் தமிழர்கள் போட்டியிடுவதால் கிழக்குமாகாணத்திலும், வன்னியிலும் தமிழர் பிரதி நிதித்துவம் குறைந்து வருவதைத் தடுக்கலாம் என்றும்தற்போது பாராளுமன்றம் கலைக்கப் பட்டமையும் தமிழர் எம்பிக்களுக்கு ஒருபடிபபினையாக இருக்கும் என்றும் தெரிவிக் பட்டுள்ளது. (வ)

# காவலுக்குச் சென்ற சிப்பாய் சடலமாக மீட்பு

## நாகர் கோவிலில் சம்பவம்

(மந்திகை)

நாகர் கோவில் முன்னணி காவலரண் பகுதியில் கடமைக்குச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் அப்பகுதிப் பற்றைகளுக்கிடையில் சடலமாக மீட்கப்பட்டார்.

பருத்தித்துறை மாவட்டபதில் நீதவான் அன்னலிங்கம் பிறேம்சங்கர் சம்பவ இடத்திற்குச்சென்றுவிசாரணைகளை மேற்கொண்டார்.

(மந்திகை)

நாசர் கோவில் முன்னணி காவலரண் பகுதியில் கடமைக்குச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் அப்பகுதிப் பற்றைகளுக்கிடையில் சடலமாக மீட்கப்பட்டார்.

வத்தேகமவைச் சேர்ந்த ஜி.குணரட்ண என்பவரே கடந்த 8 ஆம் திகதிசடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடமைக்குச் சென்ற சிப்பாயை காணாத சகாக்கள் அவரைத் தேடியபோதே பற்றைக்குள் ளிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

பருத்தித்துறை மாவட்ட பதில் நீதவான் அன்னலிங்கம் பிறேம்சங்கர் சம்பவ இடத்திற் குச்சென்றுவிசாரணைகளை மேற்கொண்டார்.

இறந்த சிப்பாயின் பிரேத பரிசோதனையை கொழும்பு மாவட்ட சட்டவைத்திய அதிகாரியும், மரணவிசாரணையை கொழும்பு நகர மரண விசாரணை அதிகாரியும் மேற்கொண்டு, அறிக்கையை மன்றில் சமர்ப்பிககுமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(செ-23)

# மதுவெறியரின் செயல் படையினரை கலக்கியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புனித அந்தோனியார் ஆலய வீதியில், சைக்கிளில் குண்டு பொருத்தப்பட்டுள்ளதாக புரளியொன்று கிளப்பிவிடப்பட்டதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

இதனையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளை அப்புறப்படுத்திவிட்டு, உரப்பையில் காணப்பட்ட பாசலை குண்டென எண்ணி அதனைச் செயலிழக்கச் செய்வதற்காக, நகருக்கு வரும் மக்களை தடுக்கும் வகையில் வீதிகளை மூடி பாதுகாப்பில் ஈடுபட்டனர்.

பின்னர் உரப்பையை சோதனையிட்டபோது அதற்குள் பழையவீட்டுப் பாவனைப் பொருட்கள் காணப்பட்டன.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தினால் நகரில் பெரும்கலக்கம் ஏற்பட்டது.

இதேவேளை முதல்நாள் இரவு மதுபோதையில்வந்த நபர் நடக்கமுடியாததால் அவரின் சைக்கிளை அங்கு நிறுத்திவிட்டு, ஆட்டோவில் வீடுபோய்ச் சேர்ந்ததாகவும் அவரின் சைக்கிளே அனாதரவாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் ஆட்டோ சாரதி படையினரிடம் தெரிவித்தார்.

(இ)

வீரர்களை இணைத்து மென் பந்துதுடுப்பாட்டவீரர்கள்சங்கம் அமைப்பது தொடர்பான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மென்பந்து துடுப்பாட்டத்தில் ஆர்வமுடையவர்களும், விளையாட்டுக் கழகங்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்படுகிறது.

(செ-23)

★ ★

(இருபாலை)

திருநெல்வேலி வேணியடி அருள்மிகு ஞானவைரவர் ஆலயபரிபாலனசபைபொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முக்கிய விடயங்கள் பற்றி பேசவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறுகேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(செ-221)

★ ★

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர் வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.11.30 மணிக்கு மேற்படி வைத்தியசாலை நலன் புரிச்சங்க கட்டடத்தில்தலைவர்சி.சிதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

[செ-23]

பிரிவு - 3

முதலாம் இடம்

ஜெ.ஜெனனி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

இரண்டாம் இடம்

ம. யர்சா மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

மூன்றாம் இடம்

சு ஜீவிதா அல்லாரை அ.த.க. பாடசாலை.

**பிரிவு -4**

முதலாம் இடம்

ச. சாருமதி சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம்

சி. தர்சினி கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்.

மூன்றாம் இடம்

கு. கலைவாணி உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.

## கவிதைப் போட்டி

**பிரிவு 1**

முதலாம் இடம்

ச. கோவர்த்தனி கைதடி

முதலாம் இடம்

ம. கேமப்பிரியா சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம்

ஞா. கிருபதிசன் கைதடி முத்துக்குமாரசாமிமகாவித்தியாலயம்.

மூன்றாம் இடம்

பா. சத்தியா மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.

(செ-229)

## கிராமசேவகருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து காணாமற்போனோர் தொடர்பான விசாரணையினை மேற்கொண்டு வரும் விசேடபுலனாய்வுப் பிரிவினர் பின்வரும் கிராம சேவகரை உடன் யாழ் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

நே. சுந்தரராஜன் 74, அரசடி வீதி, யாழ்ப்பாணம் கிராம சேவகர் பிரிவு-ஜே/321.

(உ-10)

## சிந்தனைக்கு விருந்து

### பள்ளிகள் ஏன்?

தேர்வு நெருங்கவினாத் தாள்வகுப்புக் கென்றேநற்
பேர்பெற்ற பள்ளிகளின் மாணாக்கர் - ஆர்வம்
மிகத்தனியார் கல்வி நிலையங்கட் கேகல்
தகும் எனிற் பள்ளிகள் ஏன்?

- பழையவன்.

# மேற்கு வங்க நிலக்கரிச்சுரங்க விபத்தில் 50 பேர் புதையுண்டனர்

(குல்கத்தா)

மேற்கு வங்கத்தில்ஏற்பட்ட சுரங்க விபத்தொன்றில் 50 இற்கும் மேற்பட்டடோர் நிலத்தில் புதையுண்டுள்ளனர்.

மேற்கு வங்க பர்துவான் மாவட்டத்தில் சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட சுரங்கம் நிலத்தில் இறங்கியதில் சட்ட விரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த 50 தொழிலாளிகள் சிக்கிக் கொண்டனர்.

நிலச் சொந்தக் காரர்கள் எந்தவித அனுமதியோ பாதுகாப்போ இன்றி தொழிலாளர்களை மண் அகழ்வில் ஈடுபடுத்தினர் என்றும் நிலக்கரி வட்டாரங்கள் தெரிவித்தன.

விபத்து நடந்து இரண்டு நாட்களாகியும் எந்த வித மீட்புப் பணியும் தொடங்கவில்லை.

இதேவேளை, இன்னும் பல பகுதிகள் இடியக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாக நிலக்கரி வயல் வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# பாக்.விமான நிலையத்தை அமெரிக்கா பாவிக்கவில்லை

## பாக். தரப்பு மறுப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் தனதுவிமான நிலையங்களை அமெரிக்கா பயன் படுத்த அனுமதி வழங்கியிருப்பதுடன் அமெரிக்காவின் இராணுவத்துருப்புக்கள் பாகிஸ்தானில் தரையிறங்கியுள்ளன என்ற செய்தியில் எதுவித உண்மையுமில்லை என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர்தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் மொகமட் ஹெய்பர் லண்டன் பி.பி சிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் விமான நிலையங்களை யுத்த மீட்பு நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்த அனுமதி அளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-7)

# ஆப்கான் அகதிகளுக்கு இந்தியா நிவாரண உதவி

(புதுடில்லி)

ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு,இந்தியா 10 இலட்சம் தொன் கோதுமை மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்கமுன்வந்துள்ளது.

வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஜஸ்வந்சிங் நேற்றுப் புதுடில்லியில் இது குறித்து தெரிவிக்கையில், ஆப்கானிலிருந்து பாகிஸ்தான் வந்தடைந்த அகதிகளுக்கு இந்தஉதவி வழங்கஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தெரிவித்தார்.

ஆப்கானில் பல இனங்களைக்கொண்ட அரசு அமைவதை இந்தியா ஆதரிக்குமென்றும்,

அதேவேளை, ஆப்கானிலிருந்து வருவோருக்கு விசா மற்றும் வசதிகள் வழங்கப்படுமென்றும் அதற்கான ஏற்பாடுகளை எல்லைப் புறங்களில் உள்ள அதிகாரிகள் கவனிப்பார்களென்றும் தெரிவித்தார். (து)

# பயங்கரவாதத்தை எதிர்த்து வாஜ்பாயின் ரஷ்யப் பயணம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அடுத்த மாதம் ரஷ்யா செல்ல இருக்கிறார்.

உலக பயங்கரவாதத்துக்கு எதிராக அணிதிரட்டும் வகையில் ரஷ்யா செல்ல இருக்கும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ரஷ்ய அதிபர் புட்டினுடன் விரிவாக இது தொடர்பாக ஆராயவுள்ளார்.

இதனைப் புதுடில்லியில்அறிவித்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங், சர்வதேசப்பயங்கர வாதத்தை ஒடுக்குவதற்காக எடுக்கும் போராட்டம் வெற்றிபெற்று அதன் குறிக்கோளை எட்டுவதற்கு மற்ற நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து செயற்படுவது அவசியம் என்றார்.

இதற்கிடையே, ரஷ்யாவின் துணைப்பிரதமர் இரண்டு நாள் விஜயமாக இந்தியா வந்திருக்கிறார். (து)

# அமெரிக்கத் தாக்குதல் விரிவாக்கப்படும்

(வாஷிங்டன்)

பயங்கர வாதத்திற்கெதிரான யுத்தத்தை, பின்லேடனின் அல்கொய்தா அமைப்பிற்கும் ஆப்கானிஸ்தானுக்கும் மட்டுமன்றி ஏனைய நாடுகள்மீதும் விரிவாக்க வேண்டிய தேவை ஏற்படும் என ஐக்கிய நாடுகள் பாதுகாபபு சபைக்கு எழுதிய கடிதத்தில் ஐ.நா அமெரிக்க தூதர் 'ஜோன் நிக்ரோ பொன்ரே' குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் தற்பாதுகாப்பிற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பாதுகாப்புக் காரணங்களுக்காக அமெரிக்காவின் துணை ஜனாதிபதி டிக்சன் பெயர் குறிப்பிடப்படாத இடத்தில் தங்கிஉள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

# இந்திய வம்சாவளி ஆங்கில எழுத்தாளர் நேபாலுக்கு நோபல் பரிசு

(புதுடில்லி)

இந்த ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசிற்கு ஆங்கில எழுத்தாளரான வி. எஸ். பிரபாகர் நேபால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷில் வாழும் இவரின் தாய் தந்தையர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்.

69 வயதான வி.எஸ் பிரபாகர் நேபாலுக்கு நேற்று முன்தினம் நோபல் பரிசைநடுவர் குழு அறிவித்தது.

வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி ராக்கோமில் நடைபெறும் விழாவில் நேபாலுக்கு 10 இலட்சம் டொலர் வழங்கப்படவுள்ளது.

நோபல் பரிசுபெறும் நேபாலுக்கு இந்திய குடியரசுத் தலைவர் கே. ஆர். நாராயணனும் பிரதம மந்திரி வாஜ்பாயும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியுள்ளனர்.

ஏற்கனவே இந்தியாவைச் சேர்ந்த ஆறு பேர் நோபல் பரிசு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

# முரளி முதலிடம்

[லண்டன்]

பிரைஸ்வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனம்தரப்படுத்திய பந்து வீச்சாளர்கள்மற்றும் துடுப்பாட்ட வீரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி நடத்தப்பட்ட தரப்படுத்தலின்பிரகாரம்,பந்துவீச்சாளர் பட்டியலில் முதலாம்இடத்தில் இலங்கையணியைச் சேர்ந்த முரளிதரனும் அடுத்தஇடங்களில் தென்னாபிரிக்க,அவுஸ்ரேலியா,இங்கிலாந்து,அவுஸ்திரேலியா அணி வீரர்களின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

துடுப்பாட்ட வீரர்கள்பட்டியலில் அவுஸ்திரேலிய, இந்திய அவுஸ்திரேலிய, இலங்கை, தென்னாபிரிக்க அணி வீரர்களின்பெயர்கள் இடம் பெற்றுள்ளன. [உ-2]

## செய்திப்பரல்

★ கொலம்பியாவின் தென்பகுதியில் உள்ள பின்தங்கிய கிராமம் ஒன்றில் வலது சாரி போராளிகள் எனகருதப்படும் ஒரு குழுவினர் சுட்டதில்17 விவசாயிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

★ அமெரிக்க புளோரிடா மாநிலத்தில அந்தரக்ஸ் எனும் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டுள்ள மூன்றாவது நபரும் இனங்காணப்பட்டுள்ளதால் அமெரிக்க மக்கள் பெரும் அச்சம்அடைந்துள்ளனர்.

★ குவைத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கனேடியர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அவரதுமனைவி ஆபத்தான நிலையில் உள்ளார். ஆப்கான் மீதான அமெரிக்கத் தாக்குதலின் எதிரொலியாக இச்சம்பவம் பார்க்கப்படுகின்றது.

★ பிறேசிலின் உள்ளூர் விமானத்தில்உணவுப் பொட்டலத்தில் இருந்த உலோக கத்தியை எடுக்க முயன்ற நபர் ஒருவரை விமான சிப்பந்திகள் மடக்கிப்பிடித்தனர்.

★ அமெரிக்கத் தாக்குதலினால் ஆப்கான் அகதிகள் ஈரானினுள் உட்பிரவேசிப்பதைத் தடுத்த ஈரானிய அதிகாரிகள் ஈரான் எல்லையில் உள்ள ஆப்கான்பகுதியில் முகாம்களை அமைத்து அகதிளை தங்க வைத்துள்ளனர். (செ-2)

# பாகிஸ்தானில் ஆங்காங்கே வன்முறைகள் வெடிப்பு

(இஸ்லாமபாத்)

அமெரிக்காவிற்கு எதிராக பாகிஸ்தானில் வன்முறை ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

பாகிஸ்தானின் பெட்டபேஷாவல், லாகூர் ஆகிய நகரங்களில் அண்மையில் இவ்வன்முறைகள் வெடித்திருக்கின்றன.

நகர்வீதிகளில் ஒஸாமாபின் லேடனின் படங்கள் ஏந்திய வண்ணம் லேடன் வாழ்க, அமெரிக்கா ஒழிக போன்ற கோஷங்களை எழுப்பிக் கொண்டு மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

சில ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்வீச்சு, குண்டு வீச்சு தீவைப்பு போன்றவற்றில் ஈடுபட்டதாகவும் முஷாரப்பின் ஆட்சியைத் தூஷித்ததாகவும் தெரியவருகிறது.

வன்முறைக் கும்பலொன்று திரையரங்கு, வங்கி மற்றும் யுனிசெவ் கட்டடங்களுக்கு தீ மூட்டி எரித்துள்ளது.

தொடர்ந்து தீவிரவாதக் கும்பல்களும் பொது மக்களும் இந்த வன்முறைகளில் ஈடுபட்டுவருவதால் காவல்துறையினர் கலகக்காரரைப் பிடிப்பதில் தீவிரங்காட்டி வருகின்றனர். (து)

# அகதிகள் குழந்தைகளை கடலில் வீசி எறிந்தனர்

## அவுஸ்திரேலியாவில் சம்பவம்

[கன்பரா]

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்ற 187 அகதிகளைகடற்படையினர் தடுத்தவேளை அவர்கள்தமது குழந்தைகளை கடலில் வீசி எறிந்துள்ளனர். அவுஸ்திரேலிய கடலில் இக்கொடூரசம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சட்டவிரோதிகளை ஏற்றிவந்த கப்பலை அவுஸ்திரேலிய கடற்படையினர் சர்வதேச கடற்பகுதிக்கு செல்லுமாறு உத்தரவிட்டனர் இதனாலே அவர்கள்இவ்வாறு செய்துள்ளனர்.

மேலும் தாம் வந்த படகு ஆபத்தில் சிக்கியுள்ளதாக காட்டுவதற்கு படகுகளை அடித்து உடைத்துசேதப்படுத்தியுள்ளதாகவும்அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி படகில் ஈராக்கியரே அதிகமாக இருந்துள்ளதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். [செ-7]

# மீண்டும் களம் புகும் மைக்கேல் ஜோர்டான்

மூன்று வருடங்களுக்கு முன், விளையாட்டு உலகில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த கூடைப்பந்தாட்ட உலகின் முடி சூடா மன்னனான மைக்கேல் ஜோர்டான்,மீண்டும் விளையாடப் போவதாக செப்டெம்பர் 25 ஆம் திகதி அறிவித்துள்ளார்.

ஜோர்டான் முன்னர் 'சிக்காக்கோபுல்ஸ்' அணிக்காகவே விளையாடி வந்தார்: இனிமேல் வாஷிங்டன் விஷார்ட்ஸ் அணிக்காக விளையாடுவார் எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

உலக பெரும் பணக்காரர்கள் வரிசையில் மைக்கேல் ஜோர்டானும் ஒருவர்என்பது குறிப்பிடத்தக்கது. (உ-2)

# 2002 உலக கிண்ண உதை பந்தாட்டப்போட்டிக்கு புதிய அரங்கம் நிர்மாணம்

2002ல் நடை பெறவுள்ள உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்காகபுதியஅரங்கம் ஒன்றுசியோலில் நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.இந்தஅரங்கில் 63,930 பேர் ஆசனங்களில் அமர்ந்து போட்டிகளை பார்வையிடலாம்.

இந்தஅரங்கம் வரும்நவம்பர் மாதத்தில் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டு உலக கிண்ண உதைபந்தாட்ட போட்டிகளுக்கான சம்பிரதாய பூர்வமான ஆரம்பவைபவங்கள்.அரையிறுதி இறுதிப் போட்டிகள் என்பனவும் சியோல் மைதானத்தில் நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

## டெனிஸ் அணி நிதி உதவி

செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவென அமெரிக்காவின் டேவிஸ் கிண்ண டெனிஸ் அணி ஒரு லட்சம் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதாக அறிவித்துள்ளது. (உ-2)

# அந்திராக்ஸ் நோயின் தாக்கம் அதிகரிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் அந்திராக்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மூவரும் அம் மாநிலத்தில்உள்ளஒரே பத்திரிகை நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவர்கள்என அறியப்பட்டுள்ளது.

மேற்படி பத்திரிகையாளர்களில் சென்றவாரம் ஒருவர் இந் நோயினால் பாதிக்கப்பட்டு பலியாகியதைத் தொடர்ந்து மேலும் இருவருக்கு இந்நோய் தொற்றியுள்ளது அறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து பத்திரிகை அலுவலகத்தில் உள்ள நூற்றுக்கணக்கானவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்நோய் பரவலில் பயங்கரவாதத் தாக்குதல் பின்னணியில் இருப்பதை உறுதியாக கூறமுடியாத போதிலும் பரிசோதனையின் ஆய்வுகள் இதுவரை கிடைக்கவில்லை எனவும் நோய்க்கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நிலைய பேச்சாளர் தெரிவித்தார். (உ-7)

பழையம்எனக்கருதிபண்பல்ல
செய்யும்
கெழுதகைமை கேடு தரும்
குறள்

# வலம்புரி

## சொல்லுதல் யார்க்கும் எளிய

பொதுத் தேர்தலை எதிர் கொள்வதற்கு அரசியல் வாதிகள் தயாராகி வருகிறார்கள். கடந்த தேர்தல் தந்த ஆட்சிக் காலம் ஒருவருட ஆயுளுடன் மரணித்துப் போக அடுத்த ஆட்சியின் பிரசவம் டிசம்பர் 5 எனத் திகதி குறிப்பிட்டாகிவிட்டது. இப்பிரசவத்திலும் ஆரோக்கியமான பூரண ஆயுள் உடைய ஆட்சியை பெற்றெடுக்க முடியாது என்பது சர்வநிச்சயம்.

இத்தகைய ஆரோக்கிய மற்ற ஆட்சிக்கு நாட்டைப் பிடித்துள்ள இனப் பிரச்சினை என்ற நோயே காரணம் என்பது கண்டறியப்பட்ட உண்மை.

எனினும் நோயைத் தீர்த்து ஆரோக்கியமான நிலையான ஆட்சியை அமைக்க சிங்களப் பேரின வாதிகளும் - பௌத்தமத குருமாரும் முன் வந்திலர்.

யுத்தத்தின் கொடூரத்தால் சிதைவுற்றிருக்கும் நாட்டை தேர்தல் என்ற ஆட்சிப் பிரசவமும் அடிக்கடி ஏற்பட்டு மேலும்குட்டிச் சுவராக்கப் போகிறது.

இனப்பிரச்சினைக்கு விசுவாசமாகத்தீர்வுகண்டு நாட்டை அழிவிலிருந்து மீட்டெடுக்கும் பரந்த மனப்பாங்கு கொண்ட அரசியல்வாதிகளுக்கு நிலவும் பஞ்சமே இந்நிலைக்குக் காரணமாகும்.

எனினும் மேடை போட்டுப் பேசுகின்ற அரசியல் வாதிகள் இனப் பிரச்சினைக்கு உடன் தீர்வு என்ற கோஷத்துடனேயே தமது பிரசாரப் பூசையைத் தொடங்குகின்றனர்.

ஆறு மாதங்களுக்குள் பிரச்சினைக்குத் தீர்வு காணுவேன் எனக்கூறிய ஜனாதிபதி சந்திரிகாவால் ஆறுவருடம் சென்றும் தீர்வைக் காண முடியாது போய்விட்டது.

இப்போது ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தமிழ் மக்களுக்கு கூடிய அதிகாரங்களைக் கொடுத்துப் பிரச்சினைக்குத்தீர்வு காணுவேன் என்று கூறியுள்ளார்.

இனப் பிரச்சினைக்காக சந்திரிகா அரசால் கொண்டுவரப்பட்ட உத்தேச அரசியல் யாப்பு தமிழர்களுக்குக் கூடிய அதிகாரங்களை வழங்குவதாககூறி அதனை எதிர்த்த ரணில் விக்கிரம சிங்கா இப்போது தமிழ்மக்களுக் கூடிய அதிகாரம் கொடுக்கப்போவதாக தெரிவித்திருப்பது விசித்திரமாகவேயுள்ளது.

# தேசிய மட்டத்தில் ஆரம்ப நிலை மாணவரின் கணித பாட அடைவில் ஏற்றத் தாழ்வுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

(3)

### வீட்டுப் பின்னணி

இலங்கையின் ஆரம்பக் கல்வியைப் பூரணப்படுத்தாததின் தாக்கங்கள் எழுத்தறிவில் தெளிவாகக் காணப்படுகின்றன. தமது பாடசாலைக் கற்றலில்இயல்பானமுன்னேற்றம் அடையாத பெரும்பான்மையானமாணவர்கள்காணப்படுவதற்கு காரணம், அவர்களுள் அநேகமானோர் தமது வீட்டில் ஆரம்பஅனுபவங்கள் குறைவான சமூக பொருளாதார ரீதியாக குறைவுற்றவர்களாவர். ஆய்வுகளின் படி இலங்கையில் தரம் 1 இற் பிரவேசிக்கும்மாணவர்களில்50% மட்டில் ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்வதில்லை. கிராமப் புறங்களில் இவ்விகிதம் இன்னும் அதிகமாகும். இடையில் விட்டுச் செல்வோர் பல்வேறு மட்டங்களுக்கான இலக்குகளை அடையாதவர்களாயினும் ஒப்பீட்டளவில் கூடிய அடைவு பெற்றவர்களாயினும் வசதி குறைந்த நிலையில் இடையில் விட்டுச் செல்கின்றனர்.

இவர்களின் வீட்டுச் சூழல் பாடசாலையின் முறைசார் கற்றல் தேவைகளுடன் தொடர்பான கலாசாரக் கோலங்களை வழங்குவதில்லை. இதனால்தான்அவர்களது கற்றல் பிரச்சினையின் அடிப்படை வீட்டுச் சூழலிலேயே அமைந்துள்ளது மிகக் குறைந்த கல்வி மட்டத்தைப் பெற்று வளர்ந்தோர் உள்ள குடும்பங்கள் வறுமை, பெரிய குடும்ப அளவு, வளமின்மை, தனிப்படுத்தல்ஆகியவற்றால் சூழ்ந்துள்ள வீடுகளிலிருந்து பெரும்பான்மையானபிள்ளைகள்பாடசாலைக்குச் செல்கின்றனர். நகரப்புறங்களிலுள்ள பெற்றோரிடமும், மத்திய வகுப்புக் குடும்பங்களோடும் ஒப்பிடுகையில் மேற்குறிப்பிட்ட சூழல்களிலுள்ள பிள்ளைகளுககும் வளர்ந்தோருக்கும் இடையேஇடைத்தாக்கம் மிகக் குறைவாகும். இதனால் இச்சூழல்களிலுள்ள பிள்ளைகளின் தூண்டல், மொழி விருத்தி, புத்தித்திறன்ஆகியன குறைவதற்கு ஏதுவாகின்றன.

கிராமப் புறங்களில் வளம் குறைந்த பிள்ளைகள் மொழி காட்சித்திறன்கள், அவதானத்திறன்கள், ஊக்குவிப்பு என்பவற்றில் சில குறைபாடுகளுடன் பாடசாலையிற்சேர்கின்றனர். இவர்களின் அடைவுக் கோலங்கள் சிறந்த சூழல்களிலிருந்து வரும் பிள்ளைகளின் அடைவுக் கோலங்களிலும் பார்க்க அதிகமாகப் பின்னடைந்துள்ளன. இவர்கள் பெரும்பாலும் மொழி, கணிதம் உட்பட ஏனைய பாடங்களிலும் பின்னடைந்துள்ளனர். இதன்விளைவு தான்இப் பிள்ளைகளின்பாடசாலையை இடையில் விட்டுச் செல்லும் உயர் விகிதமாகும். உண்மை என்னவெனில் இப்பிள்ளைகளின் தாழடைவு பற்றாக் குறைகளின் திரள் விளைவேயாகும். எனவே பாடசாலை மட்டத்தில் தாழ் அடைவு, குறை அபிவிருத்தியுடன் தொடர்புடையதே. இலங்கையில் தரம் 5 இற்கான புலமைப்பரிசில் தேர்வு நடத்தப்பட்டு வருகின்றபோதும் பெரும்பாலான மாணவர்கள் இத்தேர்விற்கு தோற்றுவதில்லை. அதாவது வளம் குறைந்த கிராமப் புறங்களிலுள்ள அனேக பிள்ளைகள் ஒரு போதும் தேசிய சமன் தொடர்பாகமதிப்பிடப்படுவதில்லை. உண்மையில் அவர்களுக்கு என்ன தெரியும்என்ன தெரியாது என்பதைத் தெரியாமலேயே அவர்கள் பாடசாலை முறைமையிலிருந்து விடுபடுகின்றனர்.

எனவே எந்தவொரு கல்வி முறைமையினதும்முதுகெலும்பாகிய ஆரம்பக் கல்வி முறைமையையும் அநேக மாறிகள் தாக்குகின்றன. இதில் முதன்மையானது சமூக பொருளாதார மாறிகளாகும். இங்கு பிள்ளையும் பெற்றோரும் சில சமூக உளவியல் காரணிகளைத் தாண்டிச் செல்லமுடியாதிருக்கின்றனர். இதனால் ஆரம்பக் கல்வி பாதிக்கப்படுவதுடன் கிராமிய நியதிகளில் உள்ளார்ந்துள்ள தோல்வி மனப்பாங்குகளுடன் தொடர்புறுகின்றது. கொள்கை ஆக்குவோர், திட்டமிடுவோர், அமுல் நடத்துவோர் ஆகியோரது முயற்சிகளும், ஆரம்பக் கல்வியை மீளமைத்து அபிவிருத்தி செய்தலும் இருந்த போதிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் குறிப்பாக வளம் குறைந்த பகுதிகளில் ஏற்படவில்லை.

**தம்பியப்பா காங்கேசபிள்ளை**
M.Phil (Edu) B.Sc., P.G.Dip-in-Edu. SLEAS
முது நிலை விரிவுரையாளர் (கணிதம்)
பலாலி ஆசிரியர் கலாசாலை.

### முறைசார் கல்வி வட்டாரங்களின் மீதுள்ள அக்கறைகளில் சமச்சீரின்மை

இலங்கையில் ஆரம்பக் கல்வியை விட இடை நிலை உயர் நிலை வட்டங்களில் கல்விஅதிகார சபைகள் கூடிய அவதானத்தைச் செலுத்துகின்ற நம்பிக்கை நிலவி வருகின்றது. கல்வி வாய்ப்புக்களின் சமநிலையும் பிரதேசங்களின் ஏற்றத் தாழ்வுகளின் மேலாட்சி பற்றியும் சகல கல்வி வட்டங்களிலும் அடிக்கடி சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதில் ஆரம்பக் கல்வியானது முறைசார் கல்விவட்டத்தில் பெரும் ஏற்றத் தாழ்வுகளைக்கொண்டுள்ளது. எனவும்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நகர்புறத்திலுள்ளவசதிபடைத்தோரின் சாதகமான சூழலும், கிராமப் புறத்திலுள்ள செல்வந்தர்களும் முறைசார் கல்வியின் ஆரம்ப நிலையில் ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த தடைகளுக்கே முகங்கொடுக்கின்றனர் கிராமிய செல்வந்தர்கள் சமூகரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் செல்வாக்குடையவர்களாதலால் தமது சிறார்களை கிராமங்களுக்கு வெளியேயுள்ள 'சிறந்த' பாடசாலைக்கு அனுப்பக் கூடியதாகவுள்ளது. இதனால் செல்வாக்குடையோர் தமது சமூகத்திலுள்ள பாடசாலையின்முன்னேற்றத்தில் பங்கு பற்றமல் விலகியிருப்பதற்கும், உதவி வழங்காதிருப்பதற்கும் வழிசமைக்கிறது. இவ்வாறான நிலையில் வசதி குறைந்தோர் சமூக ஏணியில்மேலேறிச்செல்வதற்கான வாய்ப்பை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படும் கல்விஉண்மையில்இதன் முழுமையான கடப்பாட்டை நிறைவேற்றுவதில்லை. வசதி குறைந்தோரின் சமூக பொருளாதார கலாசாரக் கட்டத்தினுள் அடங்காத கல்வி அமைப்பே அவர்களது முன்னேற்றத்தை தடை செய்கின்றது எனலாம்.

(தொடரும்)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பீடித்த மாசு மறைந்துவிட்டது

## கட்சிதாவல்குறித்து ஜனாதிபதி கருத்து

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்கள் எட்டுப்பேர்எதிரணியில் சுய கௌரவத்தை இழந்து அமர்ந்து கொண்டமை பணத்திற்காகவே யென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அச்சந்திப்பில் அவர்மேலும் உரையாற்றுகையில்; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை 40 ஆண்டு காலமாக வழி நடத்திய எனது தாயார் சிறிமாவோ பண்டார நாயக்கா இறந்து சரியாக ஒருவருட பூர்த்தியாகும். இத்தினத்தில் தான் இத்துரோக நிகழ்வு நிகழ்ந்துள்ளது.

எனினும், கட்சியிலிருந்து இவர்கள வெளியேறியமை கட்சிக்கு ஒரு வரப்பிரசாதமே ஏனெனில்; சிறிலங்கா சுதந்திரக்கட்சி முன்னரை விட களங்கமில்லாமல் இவர்கள் வெளியேறியபின் காணப்படுகின்றது.

வெளியேறிய உறுப்பினர்கள் ஆளும் அரசிடம் பல சலுகைகளை பெற்றுள்ளனர். இவற்றை மறந்து அவர்கள் எதிரணியில் அமர்ந்தாலும் அங்கும் இவர்கள் விசுவாசமாக இருக்கமாட்டார்களென ஜனாதிபதி தெரிவித்தார். (உ-47)

## தினசரி தியானம்

### ஓயாத பாடம்

ஓயாதே என்கவலை உள்ளே ஆனந்த வெள்ளம்
பிரியாதோ ஐயா பகராய் பராபரமே

**தாயுமானவர்**

உன்னை அடைதற்கான பாடத்தை ஈசா நீ ஓயாது புகட்டிக் கொண்டே இருக்கிறாய்.

மனிதன் ஆனந்தத்தை நாடுகிறான்; ஆனால் நிலையற்ற உலகப் பொருள்களிடத்தில் அவன் அதை நாடி ஏமாற்ற மடைகிறான். அடிமேல் அடியடித்தது இயற்கைத்தாய் அந்த இன்பம் அழியும் பொருள்களிடத்து இல்லையென்ற பாடத்தைப் புகட்டுகின்றாள். ஆனந்தத்துக்கு இருப்பிடம் இறைவன் என்பதை அறிந்து கொள்ளும் வரை அப்பாடம் நடக்கிறது.

-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## மலசலகூடம் பராமரிப்பில்லை

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை பொதுச் சந்தைப் பகுதியிலுள்ள பொது மலசலகூடம் போதிய பராமரிப்பின்றி பாவிக்க முடியாத நிலையில் இருப்பதாக தெரியவருகிறது. (உ-75)

## மிதிவெடி விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களிற்கு மிதிவெடி சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் அறிவுறுத்தல்கள் 'யுனிசெவ்' நிறுவனத்தினரால், புனரமைக்கப்பட்டு வரும யாழ் நகர மத்திய பேருந்து நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

சுமார் முப்பதுஅடி உயரத்தில் இந்த அறிவுறுத்தல்கள் நடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ். குடாநாட்டில் மிதிவெடி பாதிப்புகள் அதிகரித்துவரும் இவ்வேளையில் இவ்வாறான விழிப்புணர்வுகள் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படுவது அவசியமாகும். [செ-104]

## விளையாட்டு போட்டி

(மந்திகை)

வியாபாரி மூலை கலைக்கூட பாலர் கல்வி நிலைய மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப 2 00 மணிக்கு நிலைய முன்றலில்நடைபெறவுள்ளது.

வியாபாரி மூலை ஐக்கிய நாணய சங்கத் தலைவர் சி.சோமபாலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் ஐ ஸ்ரீரங்கேஸ்வரன் பிரதமவிருந்தினராகக்கலந்து கொள்கிறார். (செ-23)

# சர்வாதிகார ஆட்சிநடத்த ஜனாதிபதி முயற்சி

## ஜி. எல். பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேர்மையாகச் செயற்பட்டிருந்தால் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு இன்று இந்த அவலநிலை ஏற்பட்டிருக்க முடியாது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் நேற்று முன்தினம் கொழும்பு மாநகர முதல்வர் இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: பிடிவாதமும் பதவிகளைகட்டியாளும்போக்குமே ஜனாதிபதியை இன்றைய அவல நிலைக்குத்தள்ளி விட்டுள்ளன.

பத்துக்கும் மேற்பட்ட அமைச்சுப் பொறுப்புக்களைத் தன் கைத்தே வைத்துக் கொண்டு சர்வாதிகாரப்போக்கில் ஆட்சி நடத்த ஜனாதிபதி முயற்சித்தார்.

இதனை ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட அனைவரும் ஆட்சேபித்தனர் இதனால் ஜனாதிபதி எங்களை புறந்தள்ளும் முயற்சியில் இறங்கினார்.

எம்மை ஓரம்கட்டிவிட்டு ஜே.வி.பியினரை நண்பகளாக்கிக் கொண்டதன்மூலம் ஜனாதிபதி பத்து எம்பிக்களைக் கொண்ட ஜே.வி.பியிடம் மண்டியிட்டுள்ளார்.

இந்நிலையில் இதற்குமேலும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து அவமானப்படுவதைவிட ஜனநாயகத்தை நேசிக்கும் அதற்கு உரியமதிப்பளிக்கக் கூடிய தலைமையுடன் இணைவது மகிழ்ச்சியைத்தருகிறது.

எதிர் வரும் டிசம்பர் மாதம் 5ந் திகதியுடன் இந்நாட்டில் அராஜகம் ஒழிந்து ஜனநாயகம் மலரும் என்ற நம்பிக்கையுடனேயே ஐ. தே. கட்சியுடன் நாம் இணைந்து கொண்டுள்ளோமென்றும் பீரிஸ் மேலும் கூறினார். (இ)

**கட்சிமாறிய**

டி.எம் ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

இவ்வாறு லஞ்சம் கொடுத்தே அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க் கட்சிக்கு இழுக்கப்பட்டனர் இதற்குப் போதிய ஆதாரம் தம்மிடம் இருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிதாவும் வழக்கம் இருந்து வந்தாலும் இது போன்ற சம்பவம் வரலாற்றில் இதுவே முதற் தடவையாகுமென்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

**அரசஊழியர்**

பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து.

உரையாற்றும் போது சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படும் வரைதமக்கு இடைக்காலக்கொடுப்பனவை வழங்குமாறு சம்மேளனப் பிரதிநிதிகள் விடுத்த வேண்டுகோளுக்கமையவே இவ் இடைக்கால கொடுப்பனவு வழங்கப்படுவதாகவும் இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் (ந-5)

**அமெரிக்காவுக்கு**

பெற்ற தொழுகையை முடித்துக் கொண்டுநேற்றுபிற்பகல் 2மணியளவில் கொழும்பு கொம்பனித் தெருவில் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு ஊர்வலமாகச் செல்ல முற்பட்ட போதுபொலிசார் அவர்களைத்தடுத்து நிறுத்தினர்.

அமெரிக்கத் தூதரகத்தைச் சுற்றிவர கொமண்டோபிரிவினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

மருதானைப் பள்ளிவாசலுக்குமுன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியில் இறங்கி கோஷ மெழுப்பிய போது பொலிசார் அவர்கள் மீது கண்ணீர்க் குண்டுப் பிரயோகம் மேற் கொண்டனர். இதனை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் நாலா புறமும் சிதறியோடினர் இச் சம்பவம் நேற்று முற்பகல் 11. 30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு கொம்பனித் தெரு வீதியில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் ஆகியோரின் கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டதுடன் அமெரிக்க பிரிட்டிஷ் கொடிகளும் எரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கிழக்கு மாகாணம் அம்பாறையில் உள்ள முஸ்லிம்கிராமங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன

அமெரிக்காவுக்கு எதிராக நேற்று இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கலந்து கொண்டனர். (வ)

**தேர்தல்**

வைத்திருப்பதாகவும், அவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை களமுனைத் தளபதிகள் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து கருத்து வெளியிடுகையில்;

விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்குப் பகுதியில் மேற் கொண்டுவரும் சிறுசிறு தாக்குதல்கள், படையினரின் ஆயத்த நிலையை மற்றும் பலவீனத்தை அறியும் நோக்குடன் மேற் கொள்ளப்படுவதாக கூறியுள்ளனர்.

இந்நிலையில் வடக்கு கிழக்கில்பாரிய தாக்குதலொன்றை புலிகள் தொடுக்கவுள்ளதாகவும் அதனைமுறியடிக்கத்தக்க வகையில் படையினர் உசார் நிலையில் இருக்க வேண்டுமெனவும் புலனாய்வு பிரிவினர்படையினருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை புதிய தேர்தலுக்கான அரசியல் தலைவர்கள் வீதிகளில் பிரசாரத்துக்கு இறங்கும்போது அவர்களைத் தாக்கவும் புலிகள் முயலலாமென படைத்தரப்பினர் எச்சரிக்கின்றனர். (இ)

**படையினர்**

களில் விழுந்து வெடித்த போது யாழ். நகரம் குண்டுச் சத்தங்களினால் அதிர்ந்த வண்ணம் இருந்தது.

இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி எதுவும் தெரியவரவில்லை. (வ- 110)

**பொ.ஐ.முன்னணி**

உள்ளதென்று தெரிவித்த மங்களசமரவீர மேலும்தெரிவிக்கையில்,

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தற்பொழுதுள்ள ஆசனங்களைவிட மிக அதிகமான ஆசனங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு கிடைக்கும். ஜே. வி. பியினருக்கும் அதிகமாக ஆசனங்கள் நிச்சயமாகக் கிடைக்கும் அத்துடன் கிழக்கு மாகாணத்தில் முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப்புக்கும் வடமாகாணத்தில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அமோக ஆதரவு கிடைக்குமென்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் எவ்வித சிக்கலுமின்றி பொதுஜன ஐக்கிய முன்னணி மீண்டும் கூட்டரசாங்கமொன்றை அமைக்குமென்றும் மங்கள சமரவீர கூறியுள்ளார். (இ)



## வேலணை பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் 2001

மேற்படி விடயம் தொடர்பில் எம்மால் 11/10/2001 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் சார்பானது.

கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் திகதி 12/10/2001 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இது தற்சமயம் 15/10/2001 ஆம் திகதி பிற்பகல்2 மணிவரை என கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

ந. கருணாகரகுருமூர்த்தி
(ஜே.பி.யு.எம்)
தலைவர்
வேலணை பிரதேச சபை.

வேலணை பிரதேசசபை,
வேலணை,
(கி-2723)

## மரண அறிவித்தல்

### திருமதி
### நமசிவாயம் மனோன்மணி
(நயினாதீவு)

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நமசிவாயம் மனோன்மணி 11-10-2001 வியாழக்கிழமை வேலணையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், சிவகுரு ஐயாத்துரை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சிவகுரு நமசிவாயம் (நகைக்கடை கணக்காளர்) அவர்களின் அன்பு மனைவியும், லயன் கதிரவேலு J.P (அமைப்பாளர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), கருணாகரகுருமூர்த்தி(J P U M) (தலைவர்வேலணை பிரதேசசபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரதி சுதர்சினி (எழுதுநர்- வேலணைபிரதேசசெயலகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்திகா, கௌதமி டிலோஜினி, தயானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்ற அருணாசலம், குமாரசாமி, மற்றும் திருமதிஅனனலெட்சுமி ஆகியோரின் அன்புச சகோதரியும், காலஞ்சென்ற திருமதி நாகம்மா, திருமதி பார்வதிப் பிள்ளை, திருமதி தெய்வானைப்பிள்ளை, பரராசசிங்கம், திருமதிகனகமணிமுத்துலிங்கம், திருமதிதில்லைநாயகி, காலஞ்சென்ற திருமதி பார்வதி, திருமதிஇலட்சுமி மற்றும் வடிவேலு ஆகியோரின் அன்புமைத்துனியும், கரவெட்டியைச்சேர்ந்த இராசையாவள்ளியம்மை வேலணையைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை சொர்ணம் ஆகியோரின் அன்புச் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13-10-2001 சனிக்கிழமை காலை 10.00மணிக்கு வேலணையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாட்டி இந்துமயானத்திற்குஎடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ந. கருணாகரகுருமூர்த்தி (J.P.U.M)
(மகன்)
(தலைவர்- வேலணை பிரதேசசபை)
வேலணை
(கி-2722)

## கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேசசபைத் தலைவர்
திரு. ந. கருணாகரகுருமூர்த்தி
(ஜே. பி. யு. எம்)
அவர்களின் அன்புத்தாயார்
### திருமதி
### நமசிவாயம் மனோன்மணி

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

க. மணிபல்லவராஜன்
(தலைவர்)
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
(சி -2726)

## கண்ணீர் அஞ்சலி

வேலணைப் பிரதேச சபைத் தலைவர்
திரு. கருணாகரகுருமூர்த்தி (J. P. UM)
அவர்களின் அன்புத் தாயார்
### திருமதி
### நமசிவாயம் மனோன்மணி

அவர்கள் 11-10-2001அன்று காலமானதையிட்டு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா / நயினாதீவு ஸ்ரீகணேச
கனிஷ்ட்ட மகாவித்தியாலயம்
(கி/2725)

## கண்ணீர் அஞ்சலி

வேலணைப் பிரதேச சபைத் தலைவர்
கருணாகரகுருமூர்த்தி அவர்களின்
(J. P. U. M)
அன்புத் தாயார்
### திருமதி நமசிவாயம் மனோன்மணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்குஎமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிடாரி அம்பாள்
சனசமூக நிலையம்
7ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(கி/ 2724)


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.